# University Research Day

Vinayaka Mission's Research Foundation-Deemed to be University, Salem has celebrated its University Research Day on 11th August 2023. Hon. Chancellor, Dr.A.S.Ganesan presided over the function. In his Presidential address Dr. A.S.Ganesan mentioned that the National Education Policy-2020 emphasizes the importance of Research in Higher Educational Institutions. He expressed satisfaction that Research Outcomes have improved significantly in VMRF (DU) in the last Five years. He suggested to the faculty to collaborate among the sister institutions and carry out quality multidisciplinary Research. He also gave away the three Chancellor's Awards of Rs. 1 Lakh each, 7 *Research* Prizes of Rs. 10,000/- each and 12 cash prizes for the 1st, 2nd& 3rd Prize winners in Research Papers Presentation. He mentioned that seed money for research of Rs. 7 crore is given in the year 2023-2024 for faculty to do their Research.

Dr. Manoj Murhekar, Director, National Institute of Epidemiology, ICMR, Chennai, in his Keynote address dwelt in detail about the need for faculty to carryout research, the challenges and solutions.

Prof. Dr. P.K Sudhir, Vice Chancellor, VMRF (DU) emphasized the need for Research in the academic institutes. He mentioned that various research initiatives that were taken in our University are yielding positive results. He mentioned that the New Education Policy 2020 gives the need for multidisciplinary Research and VMRF (DU) being one of the biggest multidisciplinary Universities shall contribute more to multidisciplinary research.

Prof. Dr. J. Sabarinathan, Pro Vice Chancellor, VMRF(DU) appreciated that the various research outcomes such as number of indexed publications, number of Patents granted, number of extramural Projects have increased significantly in the last few years.

Prof. Dr. A. Nagappan, Registrar, has given the Welcome address and Prof. Dr. S.A.V. SatyaMurty proposed Vote of Thanks.




## News Paper Cutting



தினத்தந்தி DAILY THANTHI

வெல்க தமிழ்

★★★★ தினத்தந்தி

விழாவில் வேந்தர் விருது பெற்றவருக்கு விநாயகா மிஷன்ஸ் நிகர்நிலை பல்கலைக்கழக வேந்தர் ஏ.எஸ்.கணேசன் ரொக்க பரிசு வழங்கிய போது எடுத்தபடம். அருகில், ஐ.சி.எம்.ஆர். இயக்குனர் மனோஜ் முர்ஹேகர் மற்றும் பலர் உள்ளனர்.

# சேலம் விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி படிப்புக்கு ரூ.7 கோடி ஒதுக்கீடு

## வேந்தர் ஏ.எஸ்.கணேசன் பெருமிதம்

சேலம், ஆக.12-

சேலம் விநாயகா மிஷன்ஸ் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி படிப்புக்காக ரூ.7கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாக வேந்தர் ஏ.எஸ்.கணேசன் பெருமிதத்துடன் கூறினார்.

### ஆராய்ச்சி தின விழா

சேலம் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆராய்ச்சி தின விழா நேற்று நடந்தது. பல்கலைக்கழக பதிவாளர் நாகப்பன் வரவேற்றார். பல்கலைக்கழக வேந்தர் ஏ.எஸ்.கணேசன் தலைமை தாங்கி பேசும் போது, தேசிய கல்வி கொள்கை-2020 உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கடந்த 5 ஆண்டுகளில் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி முடிவவுகள் கணிசமாக மேம்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழக அனைத்து உறுப்பு கல்லூரிகளும் ஆராய்ச்சி துறையில் ஒத்துழைக்க வேண்டும். தரமான பல்துறை ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆராய்ச்சிக்கான விதைப்பணம் 2023-2024 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் ஆராய்ச்சிக்காக ரூ.7 கோடி வழங்கப்படுகிறது என்றார்.

### பரிசு

தொடர்ந்து அவர், 3 வேந்தர் விருதுகளை பெற்றவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும், 7 ஆராய்ச்சி பரிசு பெற்றவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும், ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்கியதில் முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கு ரொக்க பரிசுகளையும் வழங்கினார்.

தொடர்ந்து சென்னை இந்தியன் கவுன்சில் ஆப் மெடிக்கல் ரிசர்ச் (ஐ.சி.எம்.ஆர்.) மற்றும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் எபிடெமியாலஜி இயக்குனர் மனோஜ்முர்ஹேகர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான ஆசிரியர்களின் அவசியம், சவால்கள் மற்றும் தீர்வுகள் பற்றி பேசினார்.

### ஆராய்ச்சி அவசியம்

தொடர்ந்து பல்கலைக்கழக துணைவேந்தர் பி.கே.சுதிர் பேசும்போது, நாட்டின் வளர்ச்சிக்கு ஆராய்ச்சி மிகவும் அவசியம். எங்களது பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆராய்ச்சி முயற்சிகள் நேர்மறையான முடிவுகளை தருகிறது. புதிய கல்விகொள்கை-2020, பல்துறை ஆராய்ச்சிக்கான தேவையை வழங்குகிறது. விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிகர்நிலை பல்கலைக்கழகம், மிகப்பெரிய பல்துறை பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பதால் பல்துறை ஆராய்ச்சிக்கு அதிக பங்களிப்பை வழங்கும் என்றார்.

நிகழ்ச்சியில், பல்கலைக்கழக இணை துணைவேந்தர் ஜே.சபரிநாதன், அம்புஜம், பல்கலைக்கழக இயக்குனர் பட் உள்பட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் எஸ்.ஏ.வி.சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

# கல்லூரி மாணவி மாயம்

ஆத்தூர், ஆக.12-

ஆத்தூர் பகுதியை சேர்ந்த 19 வயது மாணவி வாழப்பாடியில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் 2-ம் ஆண்டு நர்சிங் படித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 8-ந் தேதி கல்லூரிக்கு செல்ல ஆத்தூர் பஸ் நிலையத்துக்கு சென்றவர் திடீரென மாயமானார். இதுகுறித்து மாணவியின் தாய் ஆத்தூர் டவுன் போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில் குமார் வழக்குப்பதிவு செய்து மாயமான கல்லூரி மாணவியை தேடி வருகிறார்.